ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2272/06 - 2022 මාර්තු මස 21 වැනි සඳුදා - 2022.03.21

*2272/06 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 21 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 21/1978* (X) (ஆ)

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25அ என்னும் பிரிவின்கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் தினேஸ் குணவர்த்தன ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், PV101137 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதுமான எஸ்எல்ரி கம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட் தொடர்பில் மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின்கீழான அறிக்கையொன்றைப் பெற்றிருந்து, சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும், 2021 சனவரி 13 ஆந்தேதிய 2210/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான அட்டவணை II ஐ, அதன் நிரல் I இலும் அதன் நிரல் II இலுள்ள நேரொத்த பதிவிலும் காணப்படுகின்ற “இசையில் கௌரவ இளமாணி” என்னும் பதிவை உடனடுத்து, இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, இதற்கான அட்டவணை II இன் முறையே நிரல் I மற்றும் II இன் கீழ் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன்மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.

1A - PG 5788 — 510 (2022/03)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## அட்டவணை I

*நிபந்தனைகள்*

*1.* எஸ்எல்ரி கம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது, புடவை மற்றும் ஆடைத் தொழினுட்பவியலில் விஞ்ஞான இளமாணி தொடர்பில் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித்திட்டத்துக்காக மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட க.பொ.த (உயர்தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் பௌதிக விஞ்ஞானம் அல்லது உயிரியற்சார் விஞ்ஞானத் துறையில் அல்லது தொழினுட்பவியல் துறையில் அங்கீகரிக்கப்பட்ட பாடங்களில் மூன்று (03) சாதாரண சித்திகள் (S) அல்லது அதற்கு சமமான குறைந்தபட்ச நுழைவுத் தகைமைக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

*2.* எஸ்எல்ரி கம்பஸ் (பிறைவேட்) லிமிட்டெட் ஆனது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்பட்ட ஐந்து (5) ஆண்டு மீள்மீளாய்வுக்கமைய, இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

## அட்டவணை II

| *நிரல் I*<br>*பட்டங்கள்* | *நிரல் II*<br>*பட்டங்களுக்கான சுருக்கீடுகள்* |
|---|---|
| புடவை மற்றும் ஆடைத் தொழினுட்பவியலில் விஞ்ஞான இளமாணி | பிஎஸ்சி (புடவை மற்றும் ஆடைத் தொழினுட்பவியல்) |

**தினேஸ் குணவர்த்தன,**
*கல்வி அமைச்சர்.*

கொழும்பு,
*2022*, பெப்புருவரி *23*.

EOG *03 - 0933*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.